பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 27 வியாழக்கிழமை 10.02.2022 கதிர் 323

## புதையல் தோண்ட முற்பட்ட 6 பேர் மன்னாரில் சிக்கினர்

மன்னார், வங்காலை - பஸ்திபுரி பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மந்திரவாதி உள்ளடங்களாக 6 பேர் நேற்று மாலை வங்காலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் புதையல் தோண்டப் பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்களையும் பொலிஸார் மீட்டனர்.

2

# எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு மண்கவ்வும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆரூடம்



எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு படுதோல்வியடைவது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சட்டச்சிக்கல் நிலை காரணமாக விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது என வெளியாகியுள்ள செய்தி குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எந்தத் தேர்தலையும் எந்த வேளையிலும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ராஜபக்ஷ அரசுக்குத் தேர்தலை எதிர்கொள்ளும் திராணி இல்லை. அதனால்தான் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு இந்த அரசு நீடித்தது. இப்போது விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது என வெளியாகியுள்ள

2

## யாழ். நகரில் நடமாடும் கஞ்சா வியாபாரி கைது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகரில் நடமாடிய கஞ்சாப் பொதிகளை விற்பனை செய்த நபரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கஞ்சாவை சிறிய சிறிய பொதிகளாகப் பொதி செய்து நபர் ஒருவர் யாழ். நகரில் நடமாடி விற்பனை செய்து வருகின்றார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் பொலிஸார் சந்தேக நபரைக் கைதுசெய்ததுடன், கஞ்சா பைக்கெற்றுக்களையும் மீட்டனர்.

சந்தேகநபரை விசாரணைகளின்

2

# ஏலம் விட வேண்டிய ஒன்பது படகுகள் மன்னாரில் மாயம்!

## வெறுங்கையுடன் திரும்பினர் அதிகாரிகள்

(ந.லோகதயாளன்)

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 10**

**அத்துமீறிய இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மன்னாரில் வைத்து பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறிவிக்கப்பட்ட 9 படகுகள் திடீரென மாயமாக மறைந்து விட்டன. அவற்றை ஏலம் விடுவதற்காக இன்று அங்கு சென்ற நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் படகுகளைக் காணாது அதிர்ச்சியுடன் திரும்பிய சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**

2

## பதுளை அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்தியர்கள் குழுவுக்கும் தொற்று


பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள வைத்தியர்கள் குழுவொன்று கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சிகிச்சை நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொவிட் நோய்த்தொற்றின் அறிகுறிகள் வெளிக்காட்டப்படாதமையால் கொவிட் வைரஸ் பரவுவது மேலும் துரிதப்படுத்தப்படுவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரி

2

## ஒமிக்ரோன் அல்லாத புதிய ரகம் வைரஸ் தொற்று பரவும் ஆபத்து?



புதிய உருமாறிய கொரோனா தொற்றுப் பரவ வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, அதன் பாதிப்பு இதுவரை இல்லாத வகையில் அதிகமாக இருக்கும் என்றும் எச்சரித்துள்ளது.

அந்த அமைப்பின் கொரோனா தொழில்நுட்பப் பிரிவு தலைவா மரியா கிர்கோவ் கூறுகையில் - 'தற்போதுள்ள ஒமிக்ரோன்தான் கடைசி கொரோனா வகையாக இருக்காது.

2

## தென்கொரியா பறந்தார் மைத்திரி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தென்கொரியா நோக்கி இன்று பயணமானார்.

அந்நாட்டில் நடைபெறும் சர்வதேச மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றுவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

ஐ.நாவின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கீ - மூன் விடுத்த அழைப்பையேற்றே அவர் தென்கொரியா சென்றுள்ளார்.

# டிப்பர் - மோ.சைக்கிள் மோதி விபத்து அந்த இடத்திலேயே இளைஞர் மரணம்

## வறுத்தலைவிளான் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வறுத்தலைவிளான் பகுதியில் டிப்பரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இன்று காலை தெல்லிப்பழைச் சாந்தை வீதி வறுத்தலைவிளான் பகுதியில் மணல் ஏற்றி வந்த டிப்பருடன் மோட்டார் சைக்கிள் எதிரெதிரே மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில் மற்றைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் டிப்பர் சாரதி காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், இளவாலை, உயரப்புலத்தை சேர்ந்த 18 வயதுடைய சசிக்குமார் லிசான் என்பவரே உயிரிழந்துள்ளார்.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## எந்தத் தேர்தல் நடந்தாலும் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தி வேடிக்கையாகவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் எந்தச் சட்டச் சிக்கலும் வராது. ஏனெனில், தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டு மாகாண சபைத் தேர்தலை இந்த அரசு நடத்த முடியும். தோல்விப் பயம் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்த இந்த அரசு பின்னடிக்கின்றது. தேர்தல் பயம் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தையும் இந்த அரசு ஓராண்டுக்கு நீடித்தது - என்றார்.

இதேவேளை, முடிந்தால் எதிர்க் கட்சியை இனிவரும் தேர்தலில் வென்று காட்டுமாறு சவால் விடுக்கின்றேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுப் பேரணிகளின் 'முதலாவது பொதுஜன பேரணி' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதையல் தோண்ட .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வங்காலை - நானாட்டான் பிரதான வீதி, பஸ்திபுரி பகுதியில் உள்ள வீடு ஒன்றின்பின்பகுதியில்சிலர்புதையல்தோண்டுகின்றனர் என வங்காலைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு சென்ற வங்காலைப் பொலிஸார் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 6 நபர்களைக் கைதுசெய்தனர்.

இவர்களில் கண்டியைச் சேர்ந்த சுமார் 50 வயதுடைய மந்திரவாதி ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

ஏனையநான்குநபர்கள்வாங்காலையைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்களில் ஒருவர் ஆசிரியர் எனவும் தெரியவருகின்றது.

மேலும், புதையல் தோண்டப் பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்கள் மற்றும் மந்திரம் சொல்வதற்குப் பயன்படுத்தும் ஒரு தொகுதி பொருள்களும் மீட்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் வங்காலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## யாழ். நகரில் நடமாடும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பதுளை அவசர .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்துள்ளார். அதைத் தவிர்க்க சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

## ஒமிக்ரோன் அல்லாத ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் நான்கு உருமாறிய கொரோனா தொற்று தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அவ்வப்போது இவை உருமாற்றம் அடைவதால் இதுகுறித்த முழுமையாக உறுதி செய்ய முடியவில்லை.

இந்தப் புதிய உருமாற்றம் அடைந்த கொரோனாவால் இதுவரை கொரோனா வகைகளில் இல்லாத அளவுக்கு பரவல் வேகமும், பாதிப்பும் அதிகமாக இருக்கும்.

ஆகையால், கொரோனா தடுப்பூசி செலுத்தலை துரிதப்படுத்தி, அந்தப் புதிய வகையின் பரவல் வேகத்தைக் குறைக்க வேண்டும். - என்றார்.

## டிப்பர் - மோ.சைக்கிள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏலம் விட வேண்டிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்னார் மாவட்ட கடற்பரப்பிற்குள் 2014ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு காலத்தில் ஊடுருவிய தமிழக மீனவர்களின் 9 படகுகள் மன்னாரிலும், 6 படகுகள் தலைமன்னார் கடற்படைத் தளத்திலும் தரித்து நிறுத்தப்பட்டிருக்கின்றன என அறிக்கையிடப்பட்டது. இவ்வாறு நிற்கும் படகுகளில் மன்னார் மாவட்டத்தில் 9 படகு ஏலம் விடப்படும் எனவும் பத்திரிகையில் பகிரங்க விளம்பரம் பிரசுரிக்கப் பட்டது.

இதற்கமைய இன்றைய தினம் படகுகளை ஏலம் விடுவதற்காக நீரியல்வளத் திணைக்களம் மற்றும் அமைச்சுகளின் அதிகாரிகள் குழு மன்னார் முழுவதும் தேடியபோதும் அங்கே ஒரு படகு கூட அப்படிக் காணப்படவில்லை. இதன் போது செய்தியாளர்களும் பிரசன்னமாகியிருந்தமையால் அதிகாரிகள் வாயடைத்து நின்றனர்.

இதனால் கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள், திணைக்கள உத்தியோகத்தர் இடையே கடும் வாக்குவாதம் இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

தலைமன்னார், பியர் இறங்குதுறையில்இன்றுமதியம்இந்தியமீனவர்களின் படகுகள் ஏல விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், ஏல விற்பனையில் கலந்து கொண்டு படகுகளைக் கொள்வனவு செய்ய மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளடங்களாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 30 இற்கும் மேற்பட்ட கொள்வனவாளர்கள் தலைமன்னார் - பியர் இறங்குதுறைப் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும், அறிவிக்கப்பட்டது போன்று ஏல விற்பனை இடம்பெறவில்லை என வருகை தந்த கொள்வனவாளர்கள் தெரிவித்தனர்.

இன்று காலை முதல் மதியம் வரை ஏல விற்பனைக்காகக் காத்திருந்த போதும் இறுதி நேரத்திலேயே குறித்த ஏல விற்பனை இடம்பெறாது என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், தூர இடங்களில் இருந்து வருகை தந்த கொள்வனவாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வெற்றுக் கர்ச்சனை

அண்ணனும் தம்பியும் – பிரதமரும் ஜனாதிபதியும் –நேற்று ரஜரட்டையிலிருந்து புரிந்த கர்ச்சனை தென்னிலங்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தோன்றவில்லை.

நாடு மிக மோசமான பொருளாதார இக்கட்டில் சிக்கி நிற்கின்றது. வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நாட்டின் வெளிநாட்டு செலாவணி கரைந்து போய் வெறுமையாகி விட்டது. எஞ்சியிருக்கும் தங்கச் சேகரிப்புக் கூடக் கரைந்து கையை விட்டுப் போய்விட்ட நிலைமை.

கட்டுமட்டில்லாமல் நோட்டு நோட்டாகக் கரன்ஸியை அச்சிட்டுப் பழக்கத்தில் விட்டு வருகின்றமையால் பணத்தின் பெறுமதி வெற்றுக் காகிதத்தாளாகும் நிலைமை. பணவீக்கம் எகிறுகின்றது. அதனால் விலைவாசி உயர்வு.

தினசரி தனது கடப்பாடுகளை நிறைவு செய்ய வேறு வழியின்றி நோட்டுக்களை அச்சிட்டுக் குவிப்பதே அரசிடம் இருக்கும் ஒரே மார்க்கம் என்பதால் இந்தப் பொருளாதாரம் இனி நிமிரப் போவதில்லை. நிரந்தரச் சரிவுதான் எதிர்காலம் என்று பொருளாதார நிபுணர்கள் திரும்பத் திரும்ப எச்சரித்துக் காலமாகிவிட்டது.

ஆக, சீனாவும் இந்தியாவும் கடைசி நேரத்தில் கொடுத்த கடனுதவிகள், நன்கொடைகள் போன்றவற்றினால் சேடம் இழுக்கும் நிலையில் இன்னும் உயிர் பிரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது நாட்டின் பொருளாதாரம்.

இந்தச் சீத்துவத்தில் இதற்கு மேலும் உண்மைகளை மறைத்து, தமது பிரசார உத்திகள் மூலம் மக்களைத் தொடர்ந்தும் மாயையில் வைத்திருக்கலாம் என்று ராஜபக்ஷக்கள் நம்புகின்றார்கள் போலும். அவர்களின் அநுராதபுரக் கூட்ட முழக்கம் – ரஜரட்டை கர்ச்சனை – அத்தகைய எதிர்பார்ப்பில்தான் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டின் விவசாயிகளின் வருமானம் நூறு வீதம் கிட்டுவதை உறுதிப்படுத்துவோம் என அந்த விவசாயிகளின் வயிற்றில் அடித்த அண்ணனும் தம்பியும் ரஜரட்டையில் நின்றபடி சபதம் செய்திருக்கிறார்கள்.

நல்லது. இன்று நாட்டின் விவசாயிகள் அனைவரினதும் சீற்றமும் தங்களுக்கு எதிராக – தங்கள் அரசுக்கு எதிராக – திரும்பியிருக்கின்றமையைப் புரிந்து கொண்டமையால் எழுந்துள்ள 'சமாளிப்பு' அறிவிப்பு இது.

விவசாயிகளை இன்று நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தவர்கள் தாங்கள்தான், தங்களின் தீர்க்கதரிசனமற்ற – முட்டாள்தனமான – பொறுப்பற்ற – உத்தரவுகள்தான் இந்த நிலைமையை ஏற்படுத்தின, எதேச்சாதிகாரமாக முடிவுகளை எடுக்கும் திமிர்த்தனமான தீர்மானத்தினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதை அண்ணனும் தம்பியும் முதலில் ஒப்புக் கொண்டிருந்தால், நாட்டின் விவசாயிகள் அவர்களை மன்னித்திருப்பார்களோ என்னமோ...?

அதைவிடுத்து, செய்வதை எல்லாம் செய்து, நாட்டையும் அதன் அடிப்படை தொழிலான விவசாயத்தையும் முழுமையாகக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டு – அதுவும் குறுகிய இரண்டு ஆண்டுகள் காலத்திற்குள்ளேயே நாட்டின் பொருளாதாரத்தையே சிதறடிக்க வைத்து விட்டு – இப்போது வந்து எதிரணிகள் பொய்ப் பிரசாரம் செய்கின்றன, வெளிநாட்டுச் சக்திகளுடன் சேர்ந்து அரசைக் கவிழ்க்க முயல்கின்றன என்றெல்லாம் கூப்பாடு போட்டால் அதை நம்புவதற்கு நாட்டு மக்கள் ஒன்றும் அறியாதவர்கள் அல்லர்.

நாட்டு மக்களுக்கு எல்லாம் தெரியும். அரசின் ஏதேச்சதிகாரக் கொள்கைப் போக்கால், பசி, பட்டினியின் பெருந்தீ அவர்களின் வயிற்றில் பற்றி எரிகையில், இந்த வெற்று வேட்டு கர்ச்சனைகளும் முழக்கங்களும் அந்தத் தீயை அணைத்து விடா. மாறாக, அணைய விடாமல் எரியவே செய்விக்கும்.

அரசு, தன் கொள்கைப் போக்கிலும், எதேச்சதிகார நடவடிக்கைப் பண்பிலும் தலைகீழ் மாற்றத்தைக் கொண்டு வராதவரை, தமக்கும் எஞ்சியுள்ள இரண்டரை ஆண்டுகள் காலத்தில் கூட எதனையும் பெரிதாக இந்த ஜனாதிபதியாலும் அவரது அரசினாலும் சாதித்துவிடவே முடியாது என்பதுதான் உண்மையான நிலைமையாகும்.

## சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு 4 ஆவது நாளாக இன்றும் தொடர்ந்தது

சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் 4ஆவது நாளாக இன்றும் (வியாழக்கிழமை) தொடர்ந்தது.

சுகாதார அமைச்சுடன் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளது என சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வு உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் கடந்த திங்கட்கிழமை காலை முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதன் காரணமாக பல வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிப்படைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர்தரப் பரீட்சை தொடர்பில் மாணவர்களால் முறைப்பாடுகள்!

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப் பாடம் தொடர்பான வினாத்தாள்கள் கையளிக்கும் வேளையில் இரண்டு பரீட்சை நிலையங்களின் மாணவர்கள் சிலர் அநீதிக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பத்தேகம கிறிஸ்தவ ஆண்கள் கல்லூரியின் பரீட்சை நிலையத்திலும் கம்பஹா தக்ஷிலா கல்லூரியின் பரீட்சை நிலையத்திலும் இது தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பத்தேகம கிறிஸ்தவ ஆண்கள் கல்லூரி பரீட்சை நிலையத்தைச் சேர்ந்த ஆறு மாணவர்களிடமிருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சையின் கலைப் பரீட்சைக்கான வினாத்தாள்களை உரிய நேரத்துக்கு முன்னதாக பெற்றுக்கொண்டனர் என பெற்றோர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதேவேளை, கம்பஹா தக்ஷிலா கல்லூரி பரீட்சை நிலையத்தின் இரண்டு மாணவர்களுக்கு கலைப் பரீட்சைக்கான வினாத்தாளின் இரண்டாம் பாகம் வழங்கப்படவில்லை எனத் தெரி விக்கப்படுகிறது.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் வலயக் கல்வி அலுவலகத்திலும் மாணவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

## கோரிக்கைகளுக்கு உரிய பதில் இல்லை போராட்டங்களைத் தீவிரப்படுத்த முடிவு!

### சுகாதார தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காத காரணத்தால் இன்று (வியாழக்கிழமை) முதல் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள நடவடிக்கையை தீவிரப்படுத்தவுள்ளது என சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

துணை வைத்திய சேவையுடன் இணைந்த 18 தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு இன்று நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்படுகின்றது என அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேலைநிறுத்தப் போராட்டம் தமது கோரிக்கை நிறைவேறும் வரை தொடரும் என ரத்னபிரிய தெரிவித்தார்.

## அம்புலன்ஸ் சாரதி கொலை முயற்சி பாணந்துறையில் சந்தேகநபர் கைது

பாணந்துறையில் நோயாளர் அம்புலன்ஸின் சாரதி ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்த பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை குருப்புமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேக நபர் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கைது செய்யும் போது அவரிடம் இருந்து 8 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். ஜனவரி 27ஆம் திகதி, பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நோயாளர் அம்புலன்ஸ் சாரதி ஒருவரை சுட்டுக்கொல்ல இரண்டு துப்பாக்கிதாரிகள் உட்பட நான்கு பேர் வந்திருந்தனர். எனினும், துப்பாக்கி இயங்காததால் அ;புலன்ஸ் சாரதியின் உயிர் காப்பாற்றப்பட் டதுடன், சந்தேகநபர்கள் பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை தெற்கு பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு விசாரணைகளை மேற்கொண்டு பிரதான சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

## தேவாலய ஊழியரை விடுவிக்க உத்தரவு!

பொரளை தேவாலயமொன்றில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தேவாலய ஊழியர் ஒருவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி பொரளையில் உள்ள அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் இருந்து கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார அமைச்சுக்கு முன் ஆர்ப்பாட்டம் போக்குவரத்து பலமணி நேரங்கள் தடை

சுகாதார அமைச்சிற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் காரணமாக நகர மண்டப பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஏவுகணைத் திட்டத்துக்கான நிதியை இணையத்தில் திருடிய வடகொரியா



சைபர் தாக்குதல்கள் மூலம் வட கொரியா மில்லியன் கணக்கிலான கிரிப்டோகரன்சியை திருடி, தனது ஏவு கணை திட்டத்திற்கு அதை பயன்படுத்தி யது என ஐ.நா அறிக்கை தெரிவிக்கிறது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சைபர்-தாக்குதல்கள் மூலம் 50 மில்லியன் டாலர்களுக்கும் (37 மில்லியன் பவுண்ட்) அதிகமான டிஜிட்டல் சொத்துக்களைத் திருடியதாக புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்தகைய தாக்குதல்கள் வட கொரி யாவின் அணு மற்றும் பாலிஸ்டிக் ஏவு கணைத் திட்டத்திற்கு முக்கியமான வருவாய் ஆதாரம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கண்டுபிடிப்புகள் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.நா.வின் தடைகள் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக் கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

இந்த சைபர் தாக்குதல்கள் வட அமெ ரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவில் குறைந்தது மூன்று கிரிப்டோகரன்சி பரி மாற்றங்களைக் குறி வைத்தன.

கடந்த மாதம் பாதுகாப்பு நிறுவன மான செயினாலிசிஸ் வெளியிட்ட ஆய் வில், வட கொரிய சைபர் தாக்குதல்கள் மூலம் கடந்த ஆண்டு 400 மில்லியன் டொலர்மதிப்புள்ளடிஜிட்டல்சொத்துக்களை ஈட்டியிருக்கலாம் என்று தெரிவித்தது.

மேலும் 2019 ஆம் ஆண்டில், அதி நவீன சைபர் தாக்குதல்களைப் பயன் படுத்தி வட கொரியா தனது பேரழிவுத் திட்டங்களுக்காக 2 பில்லியன் டொலர் களைத்திரட்டியது எனஐ.நா. தெரிவித்தது.

வடகொரியா அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணைகளை ஏவுவதற்கு ஐநா பாதுகாப்பு கவுன்சில் தடை விதித் துள்ளது.

எனினும், பொருளாதாரத்தடைகளை மீறி, வட கொரியா தனது அணுசக்தி மற் றும் பாலிஸ்டிக் ஏவுகணை உள்கட்ட மைப்பைத் தொடர்ந்து மேம்படுத்தி வரு கிறது என்று ஐ.நா அறிக்கை கூறுகிறது.

மேலும், இணையம் மற்றும் கூட்டு அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் வெளிநாடுகளில் பொருள், தொழில் நுட்பம் மற்றும் அறிவாற்றல் ஆகிய-வற்றைத் தொடர்ந்து தேடுகிறது வட கொரியா.

வட கொரியாவின் ஏவுகணை சோதனையில் குறிப்பிடப்பட்ட முடுக்கம் இருப்பதாக, பொருளாதாரத் தடை கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு (டி.பி.ஆர்.கே) என முறையாக அறியப் படும் வட கொரியா, கடந்த மாதம் மட்டும் ஒன்பது ஏவுகணை சோதனைகளை நடத்தியது என அமெரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை கூறியது.

வட கொரியா தன் ஏவுகணைப் படைகளின் விரைவான ஆயத்தநிலை, அதன் பரந்த இயக்கம் மற்றும் மேம்பட்ட எதிர்த்திறன் ஆகியவற்றை செயல்படுத்தி காட்டியது என்று பொருளாதாரத்தடைகள் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

சீனாவும் ரஷ்யாவும் வட கொரியா வின் ஏவுகணைகளின் பரவலைக் கண்டிக்கும்அறிக்கையில்வெள்ளியன்று கையெழுத்திட மறுத்துவிட்டன.

வட கொரியாவுக்கான அதன் சிறப்புப் பிரதிநிதி இந்த வார இறுதியில் ஜப்பான் மற்றும் தென் கொரிய அதிகாரிகளைச் சந்தித்து நிலைமையைப் பற்றி விவாதிப் பார் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா அறிவித்தது.

வடகொரியாவில் மனிதாபிமான நெருக்கடி தொடர்ந்து மோசமடைந்து வருகின்றது எனவும் ஐ.நா அறிக்கை கண்டறிந்துள்ளது. கொரோனா பெருந் தொற்றின்போது அதன் எல்லைகளை மூடிய தன் விளைவாக இந்த நிலை ஏற்பட்டிருக் கக்கூடும் என கூறப்படுகிறது.

வட கொரியாவிடம் இருந்து தகவல் இல்லாததால், சர்வதேச தடைகளால் எவ்வளவு துன்பங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிவது கடினம் என்று அது கூறியது



# தடுப்பூசி திட்டத்திற்கு எதிராக நியூஸிலாந்திலும் போராட்டம்!

கட்டாய கொரோனாத் தடுப்பூசி திட்டத்திற்கு எதிராக கனடாவை தொடர்ந்து நியூசிலாந்திலும் பாராளு மன்றத்திற்கு வெளியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தலைநகர் வெலிங்டனில் கூடிய, நூறுக்கும் மேற்பட்ட பாரவூர்திகளு டன் அதன் சாரதிகள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் சுமார் 100 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றத் திற்கு முன்பாக குவிந்துள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

எல்லை கடந்து செல்லும் பாரவூர்தி களின் சாரதிகள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என கனடா முன்னதாக அறிவித்தி ருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கன டாவின் சில பகுதிகளில் தொடர்ந்தும் சாரதிகள் வீதியை மறித்து ஆரப் பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வரும் நிலையில், தற்போது ஏனைய நாடுகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளது.

நியூஸிலாந்து, நெதர்லாந்து, அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி ஆஸ்திரேலியா அரசு அறிவிப்பு

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ் திரேலியாவில் சுற்றுலாப் பயணிகளுக்கு அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கொரோனா பரவல் காரணமாக ஆஸ்தி ரேலியாவில் இரண்டு ஆண்டுகளாக சுற்று லாப் பயணிகளை அந்நாட்டு அரசு அனு மதிக்கவில்லை. கொரோனாவைக் கட்டுப் படுத்த கடுமையான கட்டுப்பாடுகளை அந் நாட்டு அரசு விதித்தது. இதற்காக ராணு வத்தையும் அரசு பயன்படுத்தியது.

இந்த நிலையில், இரண்டு ஆண்டுக ளுக்குப் பிறகு, சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, இரண்டு டோஸ் கொரோனாத் தடுப்பூசிகளை செலுத்திக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் வரும் பிப்ரவரி 21ஆம் திகதி ஆஸ்திரேலியாவுக் குள் அனுமதிக்கப்படுவர் என்று பிரதமர் ஸ்காட் மோரிசன் தெரிவித்துள்ளார்.

மேலும், தடுப்பூசி போடாத பயணிக ளுக்கு மருத்துவக் காரணம் எதாவது இருந்தால், அவர்கள் விலக்குக்கு விண் ணப்பிக்க வேண்டும்; அதில் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டால், அவர்கள் ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் அனுமதிக்கப்படுவர் என்று ஆஸ் திரேலிய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரேலிய அரசு அனுமதி வழங்கி யுள்ளதால் உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

# ரஷ்ய அதிபர் புடினை சந்திக்கிறார் இம்ரான் கான்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இந்த மாத இறுதியில் ரஷியாவுக்கு சென்று அதிபர் விளாடிமீர் புடினை சந்திக்கவிருக் கின்றார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் ரஷ்யா செல்லும் முதல் பாகிஸ்தான் பிரதமர் இம் ரான் கான் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் தொடக்க விழாவில் பங்கேற்கச் சென்ற இம்ரான் கான், சீன அதிபர் ஷி ஜின் பிங்கை சந்தித் துப் பேசினார். உய்கா முஸ் லிம்களுக்கு எதிரான சீனா வின் அடக்குமுறை யைச் சுட்டிக்காட்டி தொடக்க விழாவை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற் றும் பல மேற்கு நாடுகள் புறக் கணித்த நிலையில், அந்த விழாவில் ரஷ்ய அதிபர் புடின் பங்கேற்றார். அங்கு இம்ரான்கானும் புடினும் அதிகாரபூர்வமாக சந்திக்க வில்லை. இம்ரான்கானின் ரஷ்ய பயணம் குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்க பாகிஸ்தான் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஃபவத் சௌத்ரி மறுத்தார். ஆப்கானிஸ் தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய பின்னர் பாகிஸ்தானில் அமெரிக்க ராணுவ தளங்களுக்கு இம்ரான் கான் அனுமதி அளிக்கவில்லை. மேலும், அதிபர் பைடன் 2021 ஜனவரியில் பதவியேற்றதிலிருந்து இம்ரான் கானுடன் தொடர்பு கொள்ளவில் லை. இந்தச் சூழ்நிலையில் இம்ரான் கானின் ரஷ்ய பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படுகிறது என ஊடகம் ஒன்று தூதரக அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. இருதரப்பு ஒத்துழைப்பு, பிராந்திய மற்றும் சாவதேச பிரச்சினைகள் குறித்து இம்ரான் கானும் புடினும் ஆலோசனை மேற்கொள் வார்கள் என தூதரக அதிகாரி தெரிவித்தார் எனவும் அந்த ஊடகம் கூறியுள்ளது.

அமெரிக்காவுடனான உறவில் சிறிய விரிசல் விழுந்துள்ள நிலையில், ரஷ்யா, சீனாவை நோக்கி பாகிஸ்தான் நெருங்கி வருகிறது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சர்ச்சைக்குரிய பட்டிருப்பு பரீட்சை நிலைய அலுவலர்கள் சகலரும் கூண்டோடு மாற்றம்

## பரீட்சைத்திணைக்களம் அதிரடி நடவடிக்கை; புதிய அலுவலர்களுடன் பரீட்சை சுமுகம்

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

க.பொ.த. உயர்தரப்பரீட்சை வினாத்தாள் விநியோகத்தில் தாமதம் எனக் கூறப்பட்டு சர்ச்சைக்குள்ளான பட்டிருப்பு பரீட்சை நிலையத்தில் கடமையிலிருந்த மேற்பார்வையாளர் முதல் அலுவலகப் பணியாள் வரை அனைவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பரீட்சைகள் திணைக்களம் இந்த அதிரடி நடவடிக்கையை அன்றைய தினமே மேற்கொண்டிருந்தது.

இந்த சர்ச்சை தொடர்பாக பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் எ.மகேந்திரகுமார் மேற்கொண்ட விசாரணை, அதனைத் தொடர்ந்து பிராந்திய பரீட்சைகள் இணைப்பாளர் மேற்கொண்ட விசாரணைகள் ஆகியவற்றின் விவரங்கள் அனைத்தும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன.

அதேவேளை அன்று பிற்பகலில் அங்கு கூடிய பெற்றோர்கள், மாணவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமாரிடம் சென்று பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் முதல் அனைவரையும் மாற்ற வேண்டும் என்று போர்க்கொடி தூக்கினர். நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் சம்பவ இடத்திற்குச. சென்று குரல் கொடுத்தார். கூடவே மாணவருக்கு நீதி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி பரீட்சைகள் திணைக்களத்துக்கும் கல்வியமைச்சுக்கும் அறிவித்தார்.

சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் பரீட்சைத்திணைக்கள பிரதிஆணையாளர் ஜீவராணி ஆகியோரிடம் முறைப்பாடும் செய்தனர்.

அதனையடுத்து உடனடியாக பரீட்சைநிலைய மேற்பார்வையாளர், உதவிமேற்பார்வையாளர், மேலதிக மேற்பார்வையாளர், மண்டபநோக்குநர்கள், பணியாள் உள்ளிட்ட அனைவரையும் இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த பட்டிருப்பு மகாவித்தியாலய பரீட்சை நிலையத்திற்கு புதிதாக மேற்பார்வையாளர் தொடக்கம் பணியாள் வரை நியமிக்கப்பட்டு பரீட்சை இப்போது சுமுகமாக நடைபெற்று வருகிறது.

இதேவேளை பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுவருகிறது.

இந்தப் பரீட்சைநிலையத்தின் மேற்படி பாடத்திற்கான விடைத்தாள் பொதியை வேறுபடுத்தி அதனை விசேடமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தி மாணவர்களுக்கு நீதிவழங்குவது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவிருக்கின்றார் எனத் தெரிய வருகிறது.

பரீட்சை ஆரம்பமாகிய முதல்தினத்தில் காலையில் இடம்பெற்ற பாடப் பரீட்சைக்கு இரு வினாப்பத்திரங்களும் காலை 8.30மணிக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் ஒரு வினாப்பத்திரம் தாமதமாக வழங்கப்பட்டிருந்ததால் இச்சர்ச்சை ஏற்பட்டிருந்தமை தெரிந்ததே.



## விடுதிக்கல்லில் வீட்டு மதிலை தள்ளி விழுத்திய காட்டு யானை

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விடுதிக்கல் கிராமத்தில் உள்ள காளிகாபுரம் வீட்டுத்திட்ட பகுதிக்குள் காட்டு யானை புகுந்து வீடுகள், பயிர்களை சேதமாக்கிய சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் இரவு திடீரென உள்நுழைந்த காட்டு யானை வீட்டின் மதிலை உடைத்துள்ளதுடன், பயிர்களை சேதப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் பொலிஸாரினால் குடையப்பட்டார்



மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் மற்றும் மட்டு ஊடக அமையத்தின் செயலாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான செல்வக்குமார் நிலாந்தனை நேற்று ஏறாவூர் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:–

கடந்த இரண்டு நாள்களாக ஊடகவியலாளர் நிலாந்தனின் வீட்டுக்குச் சென்ற ஏறாவூர் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் இருவர் விசாரணை ஒன்று இருப்பதனால் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இதன்படி நேற்று (09.02.2022) மதியம் 12 மணிக்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற நிலாந்தனை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

ஏற்கனவே கடந்த ஜுலை மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் விசாரணை செய்யப்பட்டபோது கேட்கப்பட்ட கேள்விகளைக் கேட்டே குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர் எனக் கூறப்பட்டது.

நீங்கள் எந்த எந்த ஊடகங்களில் பணியாற்றுகிறீர்கள்? நீங்கள் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரா? நீங்கள் புனர்வாழ்வு பெற்றுள்ளீர்களா? உங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து பணம் வருகிறதா? காணாமல் போன அமைப்புகளுடன் தொடர்பில் உள்ளீர்களா? எத்தனை நீதிமன்ற வழக்குகள் உள்ளன? முன்னாள் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரான தயாமோகனுடன் தொடர்பு உண்டா? – உள்ளிட்ட பல கேள்விகளைக் கேட்டுப் பதிலைப் பெற்றுள்ளனர்.

"ஏறாவூர் குற்றப் புலனாய்வுத் துறைப் பொறுப்பதிகாரி தன்னிடம், 'நீங்கள் வெளிநாட்டு அமைப்புக்கள், முன்னாள் விடுதலைப் புலிகளுடன், டயஸ்போராவுடன் தொடர்பை வைக்க வேண்டாம். உங்களுக்கு டயஸ்போராவுடன் தொடர்வு இருப்பதாகவும் உங்களை விசாரணை செய்யச் சொல்லியும் நிறைய முறைப்பாடுகள் எங்களுக்கு கொழும்பில் இருந்து வந்துள்ளன.

எல்.டி.டி. ஈ. எல்லாம் அழிஞ்சு போயிற்றுது. எனவே அந்தச் செயற்பாடெல்லாம் விட்டு விட்டு பேசாம இருக்க வேண்டும். இல்லாட்டித் தியேட்டர் மோகனைப் போல் வருடக் கணக்கில் உள்ளுக்கு இருக்க வேண்டி வரும்' – என எச்சரிக்கை செய்து அனுப்பினார்" –என ஊடகவியலாளர் நிலாந்தன் பின்னர் தெரிவித்துள்ளார்.

## சிங்களப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அரச ஊழியருக்கு சான்றிதழ் வழங்கிவைப்பு

### ஓட்டமாவடியில் சிறப்புற நடந்த நிகழ்வு






அரசாங்கத்தினால் அரச உத்தியோகத்தர்களின் மொழித் துறையை விருத்தி செய்யும் நோக்கில் அரச மொழிகள் திணைக்களத்தினால் மொழிப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி மூலம் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் சிங்கள மொழித் துறையை விருத்தி செய்யும் நோக்கில் அரச மொழிகள் திணைக்களத்தினால் 150 மணித்தியாலம் சிங்கள பயிற்சியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஓட்டமாவடியில் இடம்பெற்றது. மொழித்திணைக்களத்தின் போதனாசிரியர் எம்.எம்.ஜெயினுதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.உமாசங்கர், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.லஸந்த பண்டார, மொழித் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய இணைப்பாளர் செல்வி.ஜே.பி.பல்லவி, பாடநெறியின் பிரதேச செயலக இணைப்பாளர் பி.எம்.எம். றாஸித், மொழித்திணைக்களத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலகங்களை சேர்ந்த 48 உத்தியோகத்தர்கள் இப்பாடநெறியைப் பூர்த்தி செய்துள்ளமையுடன், அவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ஏற்பாட்டாளர்களால் அதிதிகளுக்கு நினைவு சின்னங்களும் வழங்கப்பட்டது.

# கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் பொறுப்பற்று நான் பேச முடியாது!

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்



இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் ஏனையோர் போன்று பொறுப்பற்ற முறையில் ஏனோ தானோ என்று தன்னால் கதையளக்க முடியாது என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல். நான்கு திட்டங்களை முன்வைத்து உறுதியுடன் செயலாற்றி வருகிறார் எனவும் தெரிவித்துள்ளமையுடன், கடந்த 27 ஆம் திகதி பருத்தித்துறை வத்திராய னில் இருந்து கடல் தொழிலுக்கு சென்ற நிலையில் உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர்களுக்கு அஞ்சலியையும் தெரிவித்தார்.

மேலும், நீதிக்கான குரல்கள் ஒலிக் கட்டும் நியாயங்கள் வெல்லட்டும் என்று தான் கேட்டுக்கொண்டதற்கு அமைய நீதிக்காகக் குரல் கொடுக்கும் கடற்றொழிலாளர்களின் கூடாரத்தில் அநீதியின் குழப்பக் காரர்கள் புகுந்துள்ளனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோதத் தொழில்முறைக்கு எதிராக நாடளாவியரீதியில் கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டங்கள் தொடர்பாக நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றில் விசேட அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாடாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்தவை வருமாறு -

எமது கடல் எல்லை -வளங்கள் யாவும் எமது மக்களுக்கே சொந்தம். கடல் எல்லையைத் தாண்டி வந்து அத்துமீறுகின்றசெயல் இன்று நேற்றுள்ள பிரச்சினை அல்ல. அது, நீண்ட காலப் பிரச்சினையாகும். இதற்கு முடிவு கட்ட நான் எடுத்து வருகின்ற முயற்சிகள் யாவும், வெறும் சுயலாப அரசியல் நோக்குடையவை அல்ல. இது என் உதிரத்திலும், உணர்விலும் ஒன்று கலந்து-விட்ட பிரச்சினைகளில் ஒன்றாகும். நான் கடற்றொழில் அமைச்சராகப் பதவி யேற்பதற்கு முன்னரும் நேரில் சென்று, களத்தில் நின்று எமது கடற்றொழிலாளர்களின் விவகாரங்களைச் சரிவரக் கையாண்டிருக்கின்றேன்.

கச்சதீவில் இரு தரப்பு கடற்றொழிலாளர்களையும் வைத்து, பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறேன். அதுமட்டுமன்றி, இந்திய மத்திய, மாநில தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடனும் கலந்துரையாடி வருகின்றேன். ஆகவே, இது என் கடமை மட்டுமல்ல, என் உள்ளார்ந்த உணர்வும் கூட. இந்தப் பிரச்சினையில் இரு நாடுகளும் தொடர்புபடுகின்றமையால், இராஜதந்திர முறையிலான முன்னெடுப்புகள் ஒருபுறம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்ததாக, இழுவை வலைப் படகுகளின் மூலமான தொழில் முறை என்பது இரு நாட்டு கடல் வளங்களைச் சுரண்டுவதுடன், மீனின இனப் பெருக்கமும் அழிவுற்று வருகின்றன. அதேநேரம், எமது கடற்றொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள், படகுகள் என்பனவும் பாதிக்கப்பட்டு, அழிவடைகின்றன.

எனவே, இது தொடர்பில் இருநாட்டு கடற்றொழிலாளர்களுக் கிடையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல். அடுத்ததாக, எல்லை தாண்டி வருகின்ற இழுவை வலைப் படகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தல். அடுத்து, இவ்வாறு சட்ட நடவடிக்கைளின் ஊடாக அரசுடைமையாக்கப் படுகின்ற படகுகளை, அவற்றின் இழுவை வலை மடிகளை அகற்றி, எமது கடற்றொழிலாளர்களுக்கு நீதமன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுத்தல். இராட்சத படகுகளை எதிர்கொண்டு, சிறிய படகுகளில் தொழில் செய்ய இயலாத எமது கடற்றொழிலாளர்களுக்கு இது தன்னம் பிக்கையை ஏற்படுத்துவதாகவும், அவர்களது வாழ்வாதாரங்களைஉயர்த்துவதாகவும் அமையும்.

இந்தத் திட்டங்களே நான் வகுத்திருக்கும் திட்டங்களாகும். நீதியான தீர்வு நோக்கிய எமது கடற்றொழிலாளர்களின் குரல் வளைகளை நெரிப்பதுபோல், நீதியின் கூடாரத்தினுள் ஒட்டகங்களும், குள்ளநரிகளும் நுழைந்தன. ஆனாலும், நீதியின் குரலாக நிமிர்ந்த எங்கள் கடற்றொழிலாளர்களின் தீர்வு நோக்கிய பயணத்தைத் திசை திருப்ப முயன்றவர்கள் தோற்றுப் போனார்கள்.

இதற்கு முன்னர் உள்ளூர் இழுவை வலைப் படகுகளிலிருந்து கடற்றொழில் அமைச்சர் ஓர் இரவுக்கு ஒரு படகிலிருந்த 5 ஆயிரம் ரூபா வீதம் பெறுகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 22.10.2021 நாடாளுமன்றத்தில்; தெரிவித்திருந்தார். நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தியே அவர் இந்த அப்பட்டமான பொய்யான தகவலைத் தெரிவித்திருந்தார். அவரது அந்தக் கூற்றில் உண்மை இருப்பதாக அவர் கருதினால், நீதிமன்றத்தின் ஊடாக அதை அவர் நிரூபிக்க வேண்டும். நாடாளுமன்றத்துக்கு வெளியில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தால், நான் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் அவர் அறிவார்.

ஏற்கனவே இத்தகைய போலியான கருத்துகள் தொடர்பில் நான் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும், அவற்றில் நான் வெற்றி கண்டதும் அவர் அறியாமல் இல்லை. எனவே, அவர் இந்தக்கூற்றை நிரூபிக்க முன்வர வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கின்றேன். - என்று தெரிவித்தார்.



## சுகாதார அமைச்சில் நேற்றுப் பதற்ற நிலை!

டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர் சங்கத்தின் ஆர்ப்பாட்டக் காரர்கள் குழுவொன்று சுகாதார அமைச்சின் வளாகத்துக்குள் பிரவேசித்துள்ள நிலையில் அங்கு பதற்றநிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பள அதிகரிப்பு மற்றும் பணி நிரந்தரம் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அந்த சங்கத்தால் நேற்று (புதன்கிழமை) பிற்பகல் விஹார மகாதேவி பூங்காவுக்கு அருகில் எதிர்ப்பு பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

பின்னர் அவர்கள் சுகாதார அமைச்சின் வளாகத்திற்கு வந்து தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் அதிரடிப்படையினரும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சுகாதார அமைச்சிலிருந்து வெளியேற டெங்கு தடுப்பு உதவியாளர்கள் மறுப்பு




சுகாதார அமைச்சின் வளாகத்திற்குள் நேற்று பலவந்தமாக பிரவேசித்த டெங்கு தடுப்பு உதவியாளர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப் படும்வரை அங்கிருந்து செல்ல மறுத்துள்ளனர் என அகில இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் செயலாளர் டி.ஏ.சுரங்க தர்ன, சுகாதார அமைச்சின் வளாகத்தில் குழுவொன்று தொடர்ந்தும் தங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

டெங்கு தடுப்பு உதவியாளர்களாக ஐந்து வருடங்களாகக் கடமையாற்றிய போதிலும் சுகாதார அமைச்சால் பணி நிரந்தரம் செய்யப்பட வில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2022இல் வெளியிடப்பெற்றது.